* 124 Q.—THIRU A. BALASUBRAMANYAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government have considered the recommendation of the District Development Council (Tiruchirappalli South) for bifurcation of Tiruvarangulam Panchayat Union ; and

(b) if so, the decision taken by the Government thereof ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) அக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற அநேக பெரிய பஞ்சாயத்து யூனியன்களை இரண்டாகப் பிரித்து மாற்றியமைப்பது குறித்து அரசு ஏதாவது ஆலோசனை செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மத்திய அரசாங்கம் இப்போது விஸ்தரிப்பு திட்டத்தின்கீழ் நம்முடைய தமிழ்நாட்டில் 374 ஊராட்சி ஒன்றிப்பு யூனியன்கள் இருக்கின்றன. சில இடங்களில் பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருப்பதால், வசதிக் குறைவுகள் ஏற்படும் என்று திட்டவட்டமாக கோரிக்கைகள் வந்தால், தகுந்த முடிவு எடுக்கப்படும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : ஏற்கெனவே இருந்த அரசாங்கம் பஞ்சாயத்து ஏரியாவைத் திருத்தவில்லை. ஒரு ஏரியா ஒரு வட்டத்தில் இருக்கும்போது, அதற்கு அந்தப் பக்கம்கூட ஒரு பஞ்சாயத்து ஏரியாவைப் பிரித்திருக்கிறார்கள். இனி, நல்ல முறையில் பிரிக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத்தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி தெற்கு திருச்சி பற்றிய அபிவிருத்திக் கவுன்சிலைப் பற்றியா ? இல்லையென்றால் இக்கேள்வி அனுமதிக்கப்படமாட்டாது.

* 125 Q.—THIRU M. WILLIAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to withdraw the Panchayat Union Commissioners and the Extension Officers from the panchayat unions ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஊராட்சி ஒன்றிப்பு ஆணையாளர்களை தற்போது நீக்க வேண்டுமென்ற உத்தேசம் இல்லை. சில பொறுப்பான பதவிகளை மாற்றியமைப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

THIRU K. VINAYAKAM : As this question involves the general policy of the Government regarding Panchayats and their employees, may I know whether the Special Officer who has been appointed to go into this matter and who had been sent to other States to study it, has submitted his report and if so, what action has been taken ? What is its future set-up and will there be a change or will it continue to be as before ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இதுபற்றிய முழுத் தகவல்களைத் தெரிந்துக்கொள்வதற்காக மத்தியப் பிரதேசத்திற்குச் சென்று வந்த தனி அதிகாரி ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார். எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து அதுபற்றிப் பேசுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தேவையான மாற்றங்கள் செய்வது குறித்து ஆலோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திலே, சில மாற்றங்கள் செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எந்தெந்த அதிகாரிகள், எப்படி எப்படி மாற்றப் படுவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாற்றங்கள் செய்யப்படும் என்று கூறவில்லை. மாற்றங்கள் செய்வது குறித்து ஆலோசிக்கப்படும் என்று கூறினேன்.

THIRU K. VINAYAKAM : Sir, pending a final decision on the report, will the Government assure this House that *status quo* will be maintained as far as the employees are concerned and if so, why are the employees like Grama Seavks and Grama Sevikas disturbed from the existing position ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கிராம சேவகர்கள் இதுவரையிலும் தொந்தரவு செய்யப்படவில்லை. கிராம சேவிகைகளைப் பற்றித்தான் பரிசீலிக்க வேண்டும். இவர்களை வேறு துறையிலே மாற்றலாமா என்பது குறித்து, ஹரிஜன நலத்துறை அமைச்சருடன் பேசினேன். அவர்களும் ஒரு குறிப்புத் தந்தார்கள். ஆகவே, கிராம சேவிகைகள் பற்றிய விஷயந்தான் பரிசீலிக்கப்பட வேண்டியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள், விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

MR. SPEAKER : The Hon. Member, Dr. H. V. Hande has asked for and received consent under Rule 185 of the Assembly Rules to raise a privilege matter. Dr. Hande will now raise it.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன ?

திரு. எஸ். ஜே. ராமசாமி : திரு. கோதண்டராமன் அவர்கள் கேள்வி கேட்டபோது உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்பு சபையில் நடந்த ஒன்றைப் பற்றி இப்போது சபையில் நடைமுறைக் கேள்வி எழுப்ப முடியாது. நம்முடைய பேரவை விதி 83(4)-ல் "A point of order may be raised in relation to the business before the House at tne moment" என்பதாக இருக்கிறது. ஆகவே தற்போது மாண்புமிகு உறுப்பினரை அருள்கூர்ந்து உட்காரும்படியாக அன்புடன் கேட்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : சார், நான் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்புவதற்குக் காரணமே அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதற்காகத்தான். நான் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் நடவடிக்கை தடைபடக்கூடாது என்பதற்காகத்தான் பேரவையில் எப்போது நடைமுறைக் கேள்வி கொண்டு வரலாம் என்பது பற்றி விதி தெளிவாக இருக்கிறது. விதிப் புத்தகத்தைத் தங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். தாங்களே அந்த விதியைப் படியுங்கள். இந்த நேரத்தில் நடைமுறைக் கேள்வியை எழுப்ப முடியுமா என்பதை நீங்களே உணர்ந்து கொள்ளலாம்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இதற்கு முன்பு இந்தச் சட்டமன்றத்திலேயே இதுபோன்று ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு முன்னால் இந்தப் பேரவையில் வேறு வேறு காலகட்டத்தில் இதுபோன்று எழுப்பப்பட்டிருக்கிறது. என்றாலும், அது விதிக்கு முரணாக இருக்குமானால் நான் அனுமதிப்பதற்கில்லை. நான் மாண்புமிகு உறுப்பினரை விதி 83 (4)ஐப் படிக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். பேரவையின் நடவடிக்கைகளைப் பாதிக்கக் கூடிய முறையில் எழுப்பப்படுகிற கேள்விகளை நான் அனுமதிக்க முடியாது.

2. உரிமைப் பிரச்சினை.

சட்டப் பேரவைத் தலைவருடைய குறிப்புரைகள் பற்றி மேலவையில் எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினை.

Mr. SPEAKER : I have given consent under Rule 185 to the hon. Member Dr. Hande to raise a point of privilege and I ask him to raise it.

***Dr. H. V. HANDE :** Sir, I wish to raise a matter of privilege against the Leader of the Opposition, Madras Legislative Council, and also the Hon. the Chairman, Madras Legislative Council, in regard to the issue of privilege raised on Thursday, the 29th June 1967, in that House on certain observations made by the Hon. Speaker in the Madras Legislative Assembly on the 24th June 1967 afternoon.

In this connection I would like to briefly point out how this is a matter of privilege. Hon. Members know that there are two Houses—the Legislative Council and the Legislative Assembly. In view of the fact that the Assembly Rules are silent about the exact relation between the Legislative Council and the Legislative Assembly I shall go into the practice......

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மேல் அவையில் உரிமைப் பிரச்சினை கொண்டுவரப்பட்டபோது அதன் தலைவர் அதை பரிசீலனை செய்து தம் முடிவைத் தெரிவிப்பதாகத் தெரிவித்துள்ளார்கள். அதுபோலவே இங்கும் அந்தத் தீர்மானத்தை தாங்கள் பரிசீலனை செய்து அத்தீர்மானத்தைக் கொண்டு வருவதுபற்றி தீர்ப்பு அளிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஹாண்டே அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்டு ஆய்ந்து, அவர் கொடுத்துள்ள தீர்மானத்தின் மீது முடிவு செய்வது என் பொறுப்பு. அவர் சொல்வதற்கு முன்னால் அது என்ன என்று எப்படித் தெரிந்துகொள்ள முடியும் ?

திரு. பி.ஜி. கருத்திருமன் : சார், சபை முதல்வர் சொன்னதனால் நான் எனது அபிப்பிராயத்தைச் சொல்லலாம் என்று இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பின்னால் உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்படும். இப்போது திரு ஹாண்டே அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டாமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் சொல்வது—மேல் சபையில் உரிமைப் பிரச்சினை கொண்டுவந்தபோது அதுபற்றி விளக்கங்கள் எதுவும் கொடுக்க அனுமதிக்கப்படவில்லை. அதைப் பரிசீலித்துச் சொல்வதாகத் தலைவர் சொல்லியுள்ளார். அதைப்போலவே இங்கும் விளக்கங்கள், பேச்சுக்கள் எழுவதற்கு முன்மேல் சபைத் தீர்ப்பும் வரட்டும்; கொஞ்சம் ஆழ்ந்து பரிசீலித்து எடுத்துக்கொள்ளலாம் என்பது தான்.